# தமிழர் விருந்தோம்பல்

**மு.வினோதினி**
**உதவி பேராசிரியர், தமிழ்த்துறை,**
**கதிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.**
**vinothinimphil@gmail.com**

54

**ஆய்வுச் சுருக்கம்**

பண்பாடு என்ற சொல்லுக்கு பக்குவப்படுத்துதல் அல்லது பண்படுத்துதல் என்பது பொருளாகும். மனிதனை மனிதனாக பக்குவப்படுத்துவது பண்பாடாகும். மனிதன் உணவு, உடை, உறவினர்கள், விருந்தோம்பல், இல்லற வாழ்க்கை என அனைத்திலும் அனைவரிடத்திலும் அன்பாக நடந்து கொள்வதே தலைச்சிறந்த பண்பாடாகும். அந்தப் பண்பாட்டின் ஓர் அங்கமாக விளங்குவதே விருந்தோம்பல் எனும் பண்பாகும். உலகத்தில் வேறு எந்த இடத்திலும் பார்க்க முடியாத வந்தோரை வரவேற்று உபசரித்து அனுப்பும் வழக்கம் தமிழர்களுக்குரியது. சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம், திருக்குறள், திருமந்திரம் என பல நூல்கள் விருந்தோம்பலை பற்றி சிறப்பாக எடுத்துரைக்கின்றன.. விருந்தோம்பல் என்பது இல்லம் தேடி வரும் புதியவர்களை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழி கூறி உபசரித்து உணவளிக்கும் உயரிய பண்பாகும். முன்பு அறிமுகம் இல்லா புதியவர்களை எந்த காரணமும் கருதாமல் எந்த எதிர்பார்ப்பும் இன்றி எந்த உள்நோக்கமும் இன்றி வரவேற்று அவர்களுக்கு மனம் மகிழ்வோடு விருந்தளித்து அவர்களது கலைப்பு நீங்க உணவளிப்பதே சிறந்த விருந்தோம்பலாகும். அத்தகைய விருந்தோம்பல் முறையை தமிழர்கள் பின்பற்றியதாலே இன்றும் பிற மக்களால் தமிழர்களது பண்பாடு சிறப்பாக பேசப்படுகிறது. பண்டைய தமிழர்களின் விருந்தோம்பல் பண்பு எவ்வாறு ஒரு வாழ்வியல் நெறியாக கடைப்பிடிக்கப்பட்டது என்பதை அறிவதும், சிறப்பினை உணர்வதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கருச்சொற்கள்:** பண்பாடு,விருந்தோம்பல்,விருந்து,விருந்தினர், வாழ்வியல்நெறி.

**முன்னுரை**

**“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**

என வள்ளுவர் கூறுகின்றார். அதாவது இல்லத்தில் இருந்து பொருட்களை பாதுகாத்து வாழ்க்கை நடத்துவது எல்லாம் விருந்தினரை போற்றி உதவி செய்வதற்கே ஆகும். இத்தகைய விருந்தோம்பல் தமிழர் பண்பாடுகளில் ஒன்றாகும். நாம் உண்கின்ற உணவினை புதிதாக வருபவர்களுக்கு கொடுத்து உபசரிக்கும் பண்பு விருந்தோம்பல் ஆகும். அவ்வாறு செய்யும்போது தானமும் தர்மமும் தலைகாக்கும். இத்தகைய தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்கும் விருந்தோம்பல் அதன் சிறப்பு குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**விருந்தோம்பல் பொருள்**

**‘விருந்து என்ற சொல்லுக்கு புதுமை’** என்பது பொருளாகும். தொல்காப்பியரும்

புதுமை, புதியவர் என்ற பொருளில் கையாண்டுள்ளார். இதனை

**"விருந்தே தானும்**

**புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"1**

என்ற தொல்காப்பிய நூற்பாவின் மூலம் விளக்குகிறார். தமிழர் பண்பாட்டின் சிறப்பம்சமாக விருந்தோம்பல் பண்பாடு யாரை உபசரிக்க தோன்றியது என்பதனை இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. விருந்தினர் என்பது புதிதாக வந்து இருக்கக்கூடியவர்கள். அவர்கள் தமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அல்லர். தமக்கு யார் என்று தெரியாத புதியவர்கள்தான் விருந்தினர்கள் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

**விருந்தோம்பல்**

“தமிழரின் பண்பாட்டில் தலையானது விருந்தோம்பல் ஆகும்.பண்டமாற்று முறை வழக்கிலிருந்த அக்காலத்தில் போக்குவரத்து வசதிகளும் இல்லாத சூழ்நிலை நிலவியது. எனவே இரவலர்கள் மட்டுமின்றி ஏனையோரும் ஓரிடத்திலிருந்து மற்றொரிடத்திற்கு கால்நடையாகவே நடந்து செல்ல வேண்டியிருந்தது. உணவு விடுதிகள் இல்லாத காரணத்தினால் உண்டிக்கும் உறையுளுக்கும் அனைவரும் செல்லும் ஊர்களையே நம்ப வேண்டியிருந்தது. ஆகவே, புதிதாக வருவோருக்குப் பசிக்கு உணவளிக்க வேண்டிய நிலை இருந்தமையால் விருந்தோம்பல் பண்பாடு தமிழகத்து இல்லங்களில் உருவாயிற்று" 2 என்ற கருத்து விருந்தோம்பல் உருவான காரணத்தை உரைக்கிறது.

**விருந்தோம்பல் சிறப்பு**

விருந்தோம்பல் சிறப்பை உணர்ந்து தான் உலகப் பொதுமறை தந்த வள்ளுவர் 133 அதிகாரங்களில் விருந்தோம்பல் என்ற அதிகாரத்தையும் படைத்துக் காட்டுவதன் மூலம் விருந்தோம்பல் சிறப்பினை உணரலாம். தமிழர்களின் விருந்தோம்பல் சிறப்பை,

**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்திருப்பான்**

**நல்விருந்து வானத் தவர்க்கு" 3**

என்ற குறளின் மூலம் விளக்குகிறார். தன் வீட்டை தேடி வந்த விருந்தினரைப் போற்றி மேலும் இனி எவரேனும் விருந்தினராக வருகிறாரா என வரும் விருந்தினரையும் எதிர்பார்த்து இருப்பான் என்கிறார் வள்ளுவர்.

இல்லறத்தின் தலையாயநெறி விருந்தோம்பல் என்பதை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் புலப்படுத்துகிறார்.

**மறட்படுங் கேண்மையோ டயப்பரி சாரமும்**

**விருந்துபுறந் தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்"3**

என்கிறார். மேலும் கோவலன் பிரிவால் கண்ணகி விருந்து செய்ய முடியாத நிலை பெற்றதற்கு வருந்துவதாக குறிப்பிடுகிறார்.

**"அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்**

**துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**

**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை "4**

அறவோர்க்கு அளித்தல், அந்தணருக்கு ஓம்பல், துறவோருக்கு உதவுதல் போன்றன தொல்லோர் சிறப்பு என்று சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாக விருந்து என்பது மூன்று நாட்களுக்க இருக்க வேண்டும். அதற்கு மேல் விருந்தினருக்கு மரியாதை கிடைக்காது என்ற முதுமொழி கூறப்படுவதுண்டு. ஆனால் சங்கத் தமிழர்கள் அக்கூற்றை பொய்யென நிரூபித்துக் காட்டியுள்ளனர்.இதனை,

**"ஒரு நாள் செல்லலம் இருநாள் செல்லலம்**
**பலநாள் பயின்று பலரோடு செல்லினும்**
**தலைநாள் போன்ற விரும்பினன் மாதோ"5**

என்ற பாடலின் மூலம் ஔவையார், நாம் ஒரு நாள் அல்லது இருநாள் சென்றாலும் முகம் சுழிக்காதவன். மேலும் பல நாட்கள் தொடர்ந்து சென்றாலும் முதல் நாள் எப்படி இன்முகத்தோடு வழங்கினானோ அதைப் போலவே அனைத்து நாட்களும் விருந்தளித்து உபசரிப்பவன் அதியமான் நெடுமானஞ்சி என்று விருந்தோம்பல் பண்பின் சிறப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் சோழ மன்னர்களில் புகழ்பெற்றவரான கரிகாற் சோழனின் விருந்தோம்பல் பண்பை பண்டைத் தமிழ் இலக்கியம் எடுத்தியம்புகின்றது.இதனை,

**“ஒன்றிய கேளிர் போல கேள்கொளல் வேண்டி**
**வேளாண் வாயில் வேட்பக் கூறி**
**கண்ணில் காண நண்ணு வழி இரீஇ**
**--------------------------------------------------------------**
**ஆர உண்டு பேர் அநர் போக்கி**
**செருக்கொடு நின்ற காலை” 6**

என்ற பாடலின் மூலம் முடத்தாம கண்ணியார் தன்னை நாடிவரும் விருந்தினருக்கு கொழுப்பு நிறைந்த ஆட்டுக்கறியும் மற்றும் பல்வேறு உணவுகளையும் அருகில் அமர்ந்து அவர்கள் போதும் போதும் என பல் வலிக்கும் அளவுக்கு விருந்தளித்து உபசரிப்பவன் என கரிகாற் சோழனின் விருந்தோம்பல் சிறப்பை எடுத்துரைக்கிறார்.

குடும்பத் தலைவியின் முதன்மை பண்பாக விருந்தோம்பல் இருந்ததை நற்றிணையின் கீழ்காணும் பாடல் விளக்குகின்றது. இதனை,

**"அல்லிலாயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லயற் குறுமகள் உறைவின் ஊரே"7**

என்பதன் மூலம் காணலாம். கூத்தர், பாணர், பொருநர்,விறலியர் போன்றவர்களை தமிழ் மன்னர்கள் எவ்வாறெல்லாம் உபசரித்து விருந்தோம்பலை மேற்கொண்டனர் என்பதை சங்க இலக்கியங்கள் சிறப்பாக எடுத்தியம்புகின்றது.

**விருந்தோம்பும் முறை**

விருந்தோம்பலில் உபசரிக்கும் பாங்கே முதன்மையானது. முகம் மலர்ந்து உபசரிக்கும்போது

விருந்துப்பொருள் உப்பில்லாத கூழாக இருந்தாலும் சிறப்பாக இருக்கும். இதனை,

**"ஒப்புடன் முகம் மலர்ந்து உபசரித்து உண்மைபேசி**
**உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தம் ஆகும்**
**முப்பழமொடு பாலன்னம் முகம் கருத்து இருவாராயின்**
**கப்பிய பசியினோடு கடும்பசி ஆகும் தானே"8**

என்ற பாடலின் மூலம் தன்னை நாடித் தேடி வரும் விருந்தினரை உள்ளார்ந்த மன மகிழ்ச்சியோடு வரவேற்று அன்பு மொழி பேசி, உப்பில்லாத கூழை உணவாகத் தந்தாலும் அது உண்பவர்க்கு அமுதம் போல் இருக்கும். அப்படிச் செய்யாமல் மா, பலா, வாழை எனும் முக்கனிப் பழங்களோடு, கடுகடுத்த முகத்துடன் விருந்துண்ண வந்தவர்க்குப் பால்சோறு படைத்தாலும் அது பசிக்கு வந்தவரின் பசியைப் போக்காமல் மேலும் பசியையே உண்டாக்கும் என்று கூறுகின்றார்.

நம்மை நாடிவரும் விருந்தினருக்கு நம்மிடம் உள்ள எந்த உணவாக இருந்தாலும் அதனை இன்முகத்தோடு கொடுக்க வேண்டும். அதுவே சிறந்த விருந்தோம்பல் பண்பாகும். விருந்தோம்பலில் பிறர் மனம் வாடக்கூடாது என்பதை வள்ளுவர்,

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்க குழையும் விருந்து"9**

என்ற குறளின் மூலம் எடுத்துரைக்கிறார். அனிச்சம் பூவானது மோந்தவுடன் தன் நிலையில் இருந்து வாடிவிடும். அதுபோல முகம் திரிந்து விருந்தினரை உபசரித்தால் அவ்விருந்தினரின் முகம், மனம் உடனே வாடிவிடும் என்று கூறுகின்றார்.ஆகவே தான் தமிழர்கள் விருந்தோம்பல் பண்பினை தமது தலையாய வாழ்வியல் நெறியாகக் காத்து வந்துள்ளனர்.

**ஊடல் தீர்க்கும் வாயில்**

சங்க இலக்கியத்தில் தலைவன் தலைவி ஊடல் தீர்க்கும் வாயிலாக விருந்தினர் இருந்தனர் என்பதை தொல்காப்பியம் வழி அறியலாம்.

**"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**
**பாணன் பாட்டி இளையர் விருந்தினர்**
**கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்**
**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப"10**

இல்லற வாழ்வின் இணைப்பு பாலமாக விருந்தினர் அமைந்துள்ளனர். தலைவியின் ஊடல் தீர்க்கும் வாயிலாக விருந்தினர் வருகை இருந்ததை நற்றிணைப் பாடல் வழி அறியலாம்.

**“தடமருப்பு எருமை மடநடைக் குழவி**
**புகைஎண்டு அமர்த்த கண்ணள், தகைபெறப்**
**பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்லியர்**
**அம்துகில் தலையில் துடைத்தனள், நப்புலந்து,**
**அட்டிலோளே,அம்ம அரிவை**
**எமக்கே வருகதில் விருந்தே! சிவப்பு ஆன்று,**

சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம்காண் கும்மே"11

விருந்தினர்களுக்கு உணவு சமைக்கும் தலைவி தலைவனோடு ஊடல் கொண்டுள்ளாள். தலைவன் தனது ஊடல் தீர்க்கும் வாயிலாக விருந்தினர் வருகையை வேண்டுகிறான். தலைவன் மேல் ஊடல் இருக்கும் சமயத்தில் கூட விருந்தினர்களை உபசரிக்கத் தயங்காதவளாக தலைவி விளங்குகிறாள். ஊடல் தீர்க்கும் வாயிலாக விருந்தோம்பல் விளங்கியுள்ளது என்பதை இதன்வழி அறியலாம்.

**முடிவுரை**

விருந்தோம்பல் என்பது தமிழர்ப் பண்பாட்டின் அடிப்படைப் பண்புகளின் தலைமையானது என்பதை அறிய முடிகிறது. தன்னை நாடி வருபவர்களுக்கு முழுமனதோடு தமிழர்கள் விருந்தோம்பல் செய்துள்ளனர். இன்றளவும் தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் சிறப்பிடம் பெற்று விளங்குவதை காண முடிகின்றது. உலகில் வேறுறெங்கும் காண இயலாத உயரிய வாழ்வியல் பண்பு ஒன்று தமிழர்களின் அடையாளமாக இருக்கின்றது என்றால் அது "விருந்தோம்பல்" என்பதே ஆகும். விருந்தினர்கள் முகம் மலர்வதைக் கண்டு அகமகிழ்ந்தவர்களே தமிழர்கள் ஆவர். இந்த உயரிய பண்பாட்டை நாமும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வோம்.

**அடிக்குறிப்புகள்**

1. (இளம்பூரணர் உரை), தொல்காப்பியம் பொருளதிகாரம், நூ. எ.231
2. பி.சேதுராமன், ஆற்றுப்படை இலக்கியத்தில் தமிழர் விருந்தோம்பல்
3. வேங்கடசாமி நாட்டார் (உரை.), சிலப்பதிகாரம்,பா.எ.85-86
4. வேங்கடசாமி நாட்டார் (உரை.), சிலப்பதிகாரம்,பா.எ.71-73
5. கு.வெ.பாலசுப்பிரமணியன்(உரை.),,புறநானூறு,பா. எ.101
6. கி.வா.ஜெகநாதன்(உரை.),,பொருணராற்றுப்படை,பா. எ.75-85
7.அ. விஸ்வநாதன்(உரை.) நற்றிணை, பா. எ.142.
8.ஞா. மாணிக்கவாசகன் (உரை.), விவேக சிந்தாமணி,பா. எ.4
9.பரிமேலழகர். (உரை.), திருக்குறள், குறள்.9.
10. (இளம்பூரணர் உரை), தொல்காப்பியம் பொருளதிகாரம், நூ. எ.52